DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.235/2021**

Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தாமோதரன் | | : |
| த/பெ | : மோகன் | மதம் | : |
| கிராமம் | : திருமுல்லைவாயில் | தொழில் | : தனியார் நிறுவனம் |
| வட்டம் | : அம்பத்தூர் | வயது | : 51/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 09.04.2026**

<u>மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு குறுக்கு **விசாரணை**</u>**: PW1**

1. நான் Diploma Electrical படித்துள்ளேன். Steel strips Wheels Ltd நிறுவனத்தில் 2007 ல் இருந்து senior operator ஆக வேலைக்கு சேர்ந்து தற்போது AE ஆக வேலை பார்த்து வருகிறேன். நான் வேலைக்கு சேர்ந்த கால கட்டத்தில் எனது மாத வருமானம் ரூ.35,000/– ஆகும், தற்பொழுது மாத வருமானம் ரூ.75,000/– ஆகும். 2020 காலகட்டத்தில் எனது மாத வருமான ரூ.40,000/– ஆகும். என் மனைவி இல்லத்தரசியாக தான் இருந்து வருகிறார். எனது மகன், மகள் படித்து வருகிறார்கள். எதிரி 10 ஆண்டுகளாக பழக்கம், கோவிலுக்கு வருவார்கள். செப்டம்பர் 2020 ல் தவணையாக ரூ.30,00,000/– எதிரிக்கு கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் உண்மையாக ரூ.30,00,000/– கொடுத்திருந்தால் அதன் தேதி குறித்து தெரிவித்திருப்பேன் என்றால் தவணையாக கடன் தரவில்லை ரொக்க பணமாக ஒரே முறையில் தான் கொடுத்தேன். எங்கு வைத்து யார் முன்னிலை பணம் கொடுத்தேன் என்றால் பாபா கோவிலில் 20.09.2020 தேதி என் தங்கையின் முன்னிலையில் எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி தொகை எவ்வாறு

எனக்கு கிடைத்தது என்றால் திருமுல்லைவாயில் உள்ள சொந்த வீட்டை என் சகோதரருக்கு விக்கிரைய ஒப்பந்தம் செய்து அந்த பணம் ரூ.40,00,000/- த்தை வைத்திருந்தேன் அதில் ரூ.30,00,000/- த்தை எதிரிக்கு கொடுத்தேன். அந்த சொத்தை 27.02.2021 ல் விற்பனை செய்து விட்டேன் அந்த ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் எதிரியை புகாரில் கூறியவாறு எங்கும் சந்தித்ததில்லை என்றால் சரியல்ல. எதிரியை அவரது அலுவலகம் சென்று சந்தித்தது பொய் என்றால் சரியல்ல, கோவிலில் தான் சந்தித்தேன் அலுவலகத்திற்கு சென்றதில்லை. புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு , பிரமாண வாக்குமூலத்தில் தவணையாக எதிரிக்கு பணம் கொடுத்தது தவறு என்றால் சரிதான், நான் ரொக்க பணமாக ஒரே தவணையாக தான் எதிரிக்கு கொடுத்தேன். வழக்கறிஞர் கோவிந்தராஜ் மற்றும் மனைவி கல்பனா அறிமுகம் என்றால் யார் என்றே தெரியாது. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். வருமான வரியில் சொத்தை விற்று பெற்ற பணத்தை காண்பித்துள்ளேன் அதற்கான வரியையும் செலுத்தியுள்ளேன். எதிரிக்கு கொடுத்த ரூ.30,00,000/- த்தை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். எனது வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சம்மதம். வரும் வாய்தாவில் எனது வருமான வரி அறிக்கையும் விக்கிரைய பத்திரமும் எடுத்து வர ஒப்புக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K